**கவனிக்க.-** *2010.06.11 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (III) மற்றும் பகுதி III ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*

**கவனிக்க.-** *இவ்வர்த்தமானியின் பகுதி IV (அ) மற்றும் பகுதி IV (ஆ) ஆகியவை சிங்களம் மற்றும் ஆங்கில மொழியில் தனியாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளன.*

**கவனிக்க.-** *இவ்வர்த்தமானியின் பகுதி VI இல் விலங்கு வைத்திய அலுவலர் பெயர்ப்பட்டியலொன்று ஆங்கில மொழியில் மட்டும் பிரசுரிக்கப்பட்டுள்ளது.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1659 - 2010 ජූනි 18 වැනි සිකුරාදා - 2010.06.18

*1659 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு யூன் மாதம் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி IV(அ) – மாகாண சபைகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 794 |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - | கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | – |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - | | - |
| பதவிகள் - வெற்றிடம் | - | | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை - நண்பகல் 12.00 மணியாகும்**. *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களாவன, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனையும் கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, *அதாவது 2010, யூன் மாதம் 24 ஆந் திகதி வியாழக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2010, யூன் மாதம் 11 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2010 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# பதவிகள் - வெற்றிடம்

*திருத்தம்*

**மேல் மாகாண அரசாங்க சேவையின் பின்வரும் பதவிகளுக்கு ஆட்சேர்த்துக்கொள்வதற்குரிய அறிவிப்பு**

விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினம் 2010.06.30 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டு உள்ளதென்பதனை இங்கு விண்ணப்பதாரிகளுக்கு அறிவிக்கின்றேன்.

| ஆட்சேர்த்துக்கொள்ளப்படும் பதவிகள் | பிரசுரிக்கப்பட்டுள்ள வர்த்தமானப் பத்திரிகை :- |
|---|---|
| 1. III ஆம் வகுப்பு II தரத்தில் வரி சேகரிப்பு உத்தியோகத்தர்களை ஆட்சேர்த்துக்கொள்ளல்<br>2. II ஆம் வகுப்பு II தரத்தில் மதிப்பீட்டாளர் பதவிக்கு ஆட்சேர்த்துக்கொள்ளல் | 2010.05.07 ஆந் திகதிய இல. 1653 ஐக் கொண்ட IV (அ) |
| 3. விளையாட்டு உத்தியோகத்தர்களை III ஆம் தரத்திற்கு ஆட்சேர்த்தல்<br>4. கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்களை II ஆம் வகுப்பிற்கு ஆட்சேர்த்தல்<br>5. கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களை III ஆம் வகுப்பிற்கு ஆட்சேர்த்தல் | 2010.05.21 ஆந் திகதிய இல. 1655 ஐக் கொண்ட IV (அ) |

அத்தோடு III ஆம் வகுப்பு II ஆம் தர வரிசேகரிப்பு உத்தியோகத்தர்களை ஆட்சேர்த்துக்கொள்ளும் அறிவிப்பின் கல்வித் தகைமையின் 3 ஆவது பந்தியின் "அ" பிரிவு பின்வருமாறு திருத்தப்பட வேண்டும் :-

"இலங்கையின் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டம் ஒன்றினைப் பெற்றிருத்தல் அல்லது பட்டய கணக்கியல் நிறுவன இடைநிலைப் பரீட்சையில் சித்தியெய்தி இருத்தல் அல்லது இலங்கை தொழில்நுட்ப கல்லூரியில் கணக்கியல் அல்லது வர்த்தகம் தொடர்பான டிப்ளோமா பாடநெறி இடைநிலைப் பரீட்சையில் சித்தியெய்தி இருத்தல் அத்துடன் கீழே குறிப்பிடுவதைப் போன்று க. பொ. த. (சா. த.) பரீட்சை இரண்டாம் மொழியில் சித்தி பெற்றிருத்தல்.

- சிங்கள மொழியில் தோற்றும் விண்ணப்பதாரிகள் - தமிழ் அல்லது ஆங்கில பாடத்தில்
- தமிழ் மொழியில் தோற்றும் விண்ணப்பதாரிகள் - சிங்களம் அல்லது ஆங்கில பாடத்தில்
- ஆங்கில மொழியில் தோற்றும் விண்ணப்பதாரிகள் - சிங்களம் அல்லது தமிழ் பாடத்தில்

ஆட்சேர்த்துக்கொள்ளும் பரீட்சையில் பாடப் பரப்பு பின்வருமாறு :

**III ஆம் வகுப்பு II ஆம் தரத்தில் வரி சேகரிப்பு உத்தியோகத்தர்கள் பதவிக்கு ஆட்சேர்த்துக்கொள்ளல் -**

- பொது அறிவு - இலங்கையுடன் தொடர்புடையதான அரசியல், பொருளாதார மற்றும் சமூக விடயங்கள் சம்பந்தமான பொது அறிவு வினாப்பத்திரம்
- பொது உளச்சார்பு - சொற்கள், உருவங்கள் மற்றும் கணித ரீதியாக முன்வைக்கப்படும் பிரச்சினைகளுடன் தொடர்புடைய வினாப்பத்திரம்.

**II ஆம் வகுப்பு II ஆம் தர மதிப்பீட்டாளர் பதவிக்கு ஆட்சேர்த்துக்கொள்ளல் -**

- பொது அறிவு - இலங்கை உள்ளடங்கலாக உலக அரசியல், பொருளாதார மற்றும் சமூக விடயங்கள் சம்பந்தமான பொது அறிவு வினாப்பத்திரம்.
- பொது உளச்சார்பு - தர்க்க ரீதியாக சிந்திக்கும் தன்மையின் கீழ் அபேட்சகரின் சிந்திக்கும் ஆற்றலைத் தீர்மானிப்பதற்காக தயாரிக்கப்பட்ட வினாப்பத்திரம் ஒன்று. (சொற்கள், உருவங்கள் மற்றும் கணித ரீதியாக சமர்ப்பிக்கப்படும் பிரச்சினைகளுடன் தொடர்புடைய வினாப்பத்திரம்)
- கிரகித்தல் - பந்தி ஒன்றின் கருத்தினை அறிந்துகொள்வதைப் பரிசோதித்துக்கொள்ள பல வாக்கியங்களை ஒரு வாக்கியத்தில் குறிப்பிடுதல், சுருக்கம் எழுதுதல் இதைவிட பந்தியோடு தொடர்புடையதாக வினவப்படும் வினாக்களைக் கொண்டதாகும்.

வீ. ராஜபக்ஷ,
செயலாளர்,
மாகாண அரச சேவை ஆணைக்குழு

மாகாண அரச சேவை ஆணைக்குழுச் சபை,
மேல் மாகாணம்.
2010.06.07.

6-661